## ஜ்ஸகாத் செலவழிக்கவேண்டிய இடங்கள்

*ஜ்ஸகாத் எட்டு வகையானவர்கள்மீது செலவு செய்யப்படவேண்டும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

إِنَّمَا ٱلصَّدَقَٰتُ لِلْفُقَرَآءِ وَٱلْمَسَٰكِينِ وَٱلْعَٰمِلِينَ عَلَيْهَا وَٱلْمُؤَلَّفَةِ قُلُوبُهُمْ وَفِى ٱلرِّقَابِ وَٱلْغَٰرِمِينَ
وَفِى سَبِيلِ ٱللَّهِ وَٱبْنِ ٱلسَّبِيلِ ۖ فَرِيضَةً مِّنَ ٱللَّهِ ۗ وَٱللَّهُ عَلِيمٌ حَكِيمٌ ﴿٦٠﴾ **(التوبة:60)**

*பொருள்: இந்த தானதர்மங்களெல்லாம் ஏழைகள், வறியவர்கள், தானதர் மங்களை வசூலிக்கவும் பங்கிடவும் நியமிக்கப்பட்டப் பணியாளர்கள், மற்றும் உள்ளங்கள் இணக்கமாக்கப்படவேண்டியவர்கள் ஆகியோருக் கும், பிடரிகளை விடுவிப்பதற்கும், கடனாளிகளுக்கும் மற்றும் இறைவழி யில் செலவுசெய்வதற்கும், பயணிகளுக்கும் உரியனவாகும். இது அல்லாஹ் வினால் விதிக்கப்பட்ட கடமையாகும். மேலும், அல்லாஹ் யாவற்றையும் அறிந்தோனும் நுண்ணறிவாளனுமாயிருக்கின்றான் (அத் தவ்பா:60)*

### ஏழைகள் மற்றும் வறியவர்கள்

*ஏழைகள் மற்றும் வறியவர்கள் என்றால் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளும் இல்லாத நிலையில் வாழ்பவர்களாவர். ஜ்ஸகாத்துடைய பணம் அவர்கள் மக்களுக்கு முன்பாகக் கையேந்தி நிற்கும் நிலைக்கு ஆளா கக்கூடாது என்பதறாகாக, அவர்களுடைய தேவைகள் பூர்த்தியாகும் வகை யில் செலவிடப்படவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

**لَيْسَ المِسْكِينُ الَّذِي يَطُوفُ عَلَى النَّاسِ تَرُدُّهُ اللُّقْمَةُ وَاللُّقْمَتَانِ، وَالتَّمْرَةُ وَالتَّمْرَتَانِ، وَلَكِنِ المِسْكِينُ الَّذِي لاَ يَجِدُ غِنًى يُغْنِيهِ، وَلاَ يُفْطَنُ بِهِ، فَيُتَصَدَّقُ عَلَيْهِ وَلاَ يَقُومُ فَيَسْأَلُ النَّاسَ**

*பொருள்: மிஸ்கீன் (வறியவர்) என்பவர்கள் வீடுவீடாகச்சென்று ரொட்டித் துண்டுகளைக் கேட்டுத் திரிந்துகொண்டிருப்பவர்கள் அல்ல, மாறாக, மிஸ்கீன் (வறியவர்) என்பவர் யாரெனில், எவரிடம் தன்னுடைய தேவை களைப் பூர்த்தி செய்துகொள்ளும் அளவிற்குப் பொருள் வசதி இல் லையோ மற்றும் இவர்கள் அந்தத் தேவைகளையுடையவர்கள் என்று மற்ற மக்கள் அறிந்துகொள்ளவும் அவர்களுக்கு எவ்வகையிலும் அளிக்கவும் முன்வர முடியாத வகையில் இருப்பவர்கள்தான். ஏனெனில், இவர்கள் மக்களுக்கு முன்னால் தங்களுடைய கைகளை ஏந்தித் திரிவதே இல்லை (புக்ஹாரி, முஸ்லிம்).*

www.uzairfalahi.com

**ஆமிலீன்கள் (தானதர்மங்களை வசூலிக்கவும் பங்கிடவும் நியமிக்கப்பட்டப் பணி யாளர்கள்)**

ஜ்ஸகாத் பங்கீட்டுத் துறைகள், நிறுவனங்கள் ஆகியவற்றில் ஜ்ஸகாத்தை வசூலிக்கவும் அதனைப் பாதுகாத்துக் கணக்கிட்டு முறைப்படி அதனைப் பங்கீடு செய்வதற்காகவும் பணியில் அமர்த்தப்பட்ட பணியாளர்கள் ஆமி லீன் எனப்படுவார்கள். அவர்கள் தங்கள் உழைப்பின் அடிப்படையில் இதிலிருந்து தங்களுடைய ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம், அவர்கள் தேவையற்றவர்களாக இருப்பினும் சரியே. அவர்களும் வறியவர்களாக வும் தேவைகளையுடையவர்களாகவும் இருப்பார்களேயானால், இரண்டு வகையிலும் இவர்கள் ஜ்ஃஸகாத் பணத்திலிருந்து நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு தங்கள் பங்கினையும் பெற்றுக்கொள்ளலாம்.

**உள்ளங்கள் இணக்கமாக்கப்படட்வேண்டியவர்கள்**

இவர்கள் சமீபத்தில் இஸ்லாத்தில் இணைந்தவர்களாவர், அவர்களுடைய மனங்களில் ஈமான் வேரூன்றியிருக்காது என்ற வகையில், அவர்களி டையே நல்லிணக்கமும் நிம்மதியும் ஏற்படும் வகையில் அவர்களுக்கு ஜ்ஸகாத் பொருளிலிருந்து அளித்து அவர்களிடையே மனஉறுதி மற்றும் அவர்களுக்கு ஆதரவு கிடைக்கும் வகையில் செய்யவேண்டும். ஹஜ்ரத் அனஸ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்களிடம் இஸ்லாத்தின் பொருட்டால் எந்தப் பொருள் கேட்கப்பட்டாலும் அதனை அவர்கள் ﷺ அளித்து விடுவார்கள். ஒரு முறை அவர்களிடம் ﷺ ஒருவர் வந்தார், அப்போது இரண்டு மலையடிவாரங்களுக்கிடையில் ஜ்ஸகாத் தாகப் பெறப்பட்ட ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன, அவற்றிலிருந்து அவர்கள் ﷺ அந்த மனிதருக்கு அதிக அளவில் ஆடுகளை அளிக்குமாறு கட்டளையிட்டார்கள். பின்பு அந்த மனிதர் தன்னுடைய இடத்திற்குத் திரும்பிச்சென்றுவிட்டார் மற்றும் தன்னுடைய சமூகத்தாரிடம் கூறினார், நீங்களும் ஏற்றுக்கொள்ளுங்கள், ஏனெனில், முஹம்மத் ﷺ அவர்கள் தான் பட்டினியாகக் கிடக்க வேண்டியிருக்கும் என்ற அச்சமே ஏற்படாத அள விற்கு ஒருவருக்கு வழங்குகிறார்கள் (அஹ்மத்). இந்த ஒதுக்கீட்டிலிருந்து முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாதவர் இருவகையினருக்கும் கொடுக்க லாம்.

**பிடரிகளை விடுவிப்பதற்கு (அடிமைகளின் விடுதலைக்காக)**

அடிமைகளுக்கு விடுதலைப் பெற்றுத்தருவதற்காக உதவி செய்யும் வகை யில் ஜ்ஸகாத் பொருளிலிருந்து கொடுக்கலாம். அடிமைகளை விடுதலை செய்வதற்காக உதவி செய்வது என்பது, ஒன்று அவர்களை விலை கொடுத்து வாங்கி விடுலைசெய்துவிடுவதாகும். இரண்டாவது வழி ஒரு

www.uzairfalahi.com

அடிமை தன்னுடைய எஜமானரிடம் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்துவிட்டுத் தன்னை விடுவித்தக்கொள்வான் என்று ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தால் அந்தக் குறிப்பிட்டத் தொகையினை ஜ்ஸகாத் பொருளிலிருந்து கொடுத்து அவனுக்கு விடுதலை பெற்றுத்தரலாம்.

**(ங்காரிமீன்) கடனாளிகளுக்கு (கடன் திருப்பிச் செலுத்த உதவிசெய்வதற்காக)**

முஸ்லிம்கள் மிகப்பெருமளவில் கடன்களில் மூழ்கிவிட்டு அதனைத் திருப்பிச்செலுத்தும் ஆற்றலற்றவர்களாக இருந்தால், ஜ்ஸகாத் பொருளிலிருந்து கொடுத்து அவர்களுடைய கடன்களின் பாரத்தைக் குறைக்கலாம்.

**ஃபீ சபீலில்லாஹ் (அல்லாஹ்வின் பாதையில்)**

இதன் வாசகம் பொதுவானதாக இருந்தாலும், முன்னோர்கள் இதனை அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் மற்றும் போரிடுவதைக் குறிக்கின்றது என்ற கருத்தினைக்கொண்டிருக்கின்றனர். அதாவது, இறைமறுப்பின் கொள்கைகள் மற்றும் போக்கினை அகற்றி இஸ்லாமியக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் அடங்கும் எனக் கருதுகின்றனர். இவ்வகையில், தற்காலத்தில் எந்தெந்த முயற்சிகள் அல்லாஹ்வின் வாக்கினை நிலைநாட்டும் குறிக்கோளை அடைவதில் உதவியாகவும் அதனை வலுவூட்டும் வகையிலான முயற்சிகளாக உள்ளனவோ, உதாரணமாக, அழைப்புப்பணிகள், மார்க்கக் கல்வி மற்றும் வழிகாட்டுதல்கள் அனைத்தும் இதில் அடங்கும்.

www.uzairfalahi.com

**இப்னு சபீல் (வழிப்போக்கர்கள்)**

இது பிரயாணத்தை மேற்கொண்டிருக்கும் ஒருவராவார், வழியில் அவருடைய பணம் தீர்ந்துவிட்ட நிலையில் அவருக்கு தன் வீட்டிற்குத் திரும்பிச்சென்றடையத் தேவையான அளவிற்கு ஜ்ஸகாத்திலிருந்து உதவி செய்யலாம். இப்படிப்பட்ட ஒருவர், தன் ஊரில் பெரும் செல்வந்தராக இருந்தாலும், பயணத்தின் காரணமாக, அவர் எதிர்கொண்டிருக்கும் தேவைகளின் அடிப்படையில் ஜ்ஸகாத் பெறும் தகுதியுடையவராகவே கருதப்படுவார். ஜ்ஸகாத் கொடுப்பதற்கான எட்டு வகையானவர்கள் வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், அந்த எட்டு வழிகளிலும் சமமாகச் செலவிடவேண்டும் என்ற கட்டாயமில்லை, மாறாக, தேவைகளுக்கேற்ப செலவு செய்யலாம்.

**ஜ்ஸகாத் யாருக்குக் கொடுக்கக்கூடாது**

**1 செல்வந்தர்கள்**

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَا تَحِلُّ الصَّدَقَةُ لِغَنِيٍّ، وَلَا لِذِي مِرَّةٍ سَوِيٍّ

*பொருள்: எந்த ஒரு செல்வந்தரும் ஜ்ஸகாத்தைப் பெறுவது அவருக்கு அனுமதிக்கப்பட்டதல்ல, அவ்வாறே சம்பாதிக்கும் ஆற்றலும் ஆரோக்கியமும் உடைய ஒருவருக்கும் அனுமதிக்கப்பட்டதல்ல. (அபூ தாவூத், நிசாயி).*

2 **பனூ ஹாஷிம் மற்றும் பனூ அப்துல் முத்தலிப்**

இவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களாவர். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ الصَّدَقَةَ لَا تَنْبَغِي لِآلِ مُحَمَّدٍ

*பொருள்: முஹம்மத் ﷺ அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு ஜ்ஸகாத் (ஸதஃகா) ஆகுமானதல்ல (முஸ்லிம்)*

3 **கா∴பிர்கள் (இறை மறுப்பாளர்கள்)**

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஜ்ஸகாத்தைப்பற்றிக் கூறும்போது கூறுகிறார்கள், இது செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு ஏழை எளியவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இதன் பொருள் என்னவெனில், முஸ்லிம் செல்வந்தர்கள் மற்றும் முஸ்லிமான ஏழைகள். (புக்ஹாரி, முஸ்லிம்)

4 **ஜ்ஸகாத் கொடுப்பவருடைய பொறுப்பிலுள்ள அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள்**

உதாரணமாக, பெற்றோர், குழந்தைகள், மனைவிகள் ஆகியோர். ஜ்ஸகாத் எந்த இடத்திலிருந்து பெறப்படுகின்றதோ அதே ஊரிலுள்ளவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படவேண்டும். உறவினர்கள் தூரமான ஒரு ஊரில் இருந்தாலும் அவர்களுக்குக் கொடுப்பது தவறில்லை, அல்லது, தூரமான ஒரு ஊரில் இருப்பவர்கள் அதிகத் தேவையுள்ளவர்களாக இருந்தாலோ அல்லது மாணவர்களுக்கோ கொடுக்கலாம். ஜ்ஸகாத் கொடுப்பவர் அரசுக்குக் கொடுக்கவேண்டிய வரிகளை ஜ்ஸகாத்திலிருந்து கொடுக்கக்கூடாது.

* * *

www.uzarfalahi.com